செய்தி வெளியீடு எண்: 049 நாள்: 18.01.2018

## செய்தி வெளியீடு

புது டில்லியில் 18.01.2018 அன்று நடைபெற்ற 25–வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தில் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

ஜி.எஸ்.டி. அறிமுகப்படுத்திய பின் 6 மாதங்கள் கடந்துள்ள நிலையில், தமிழ்நாட்டில் இந்த புதிய வரி முறைக்கு சுமுகமான முறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. வரிவீதங்கள் குறித்தான சில இனங்கள் மட்டும் நிலுவையில் உள்ளன. இவை குறித்து ஜி.எஸ்.டி. மன்றத்தில் மாண்புமிகு அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். மேலும், ஜி.எஸ்.டி. வரிவீதமானது மேலும் எளிமைப்படுத்திட வேண்டும் என கருத்துக்களை முன் வைத்திருந்தார்.

இந்நேர்வில், இன்றைய கூட்டத்தில் ஜி.எஸ்.டி. சட்டத்தின் கீழ் வணிகர்கள் நமூனாக்கள் தாக்கல் செய்வதை எளிமைப்படுத்திடும் பொருட்டு, இது தொடர்பான குழுவின் பரிந்துரைகள் விரிவாக விவாதிக்கப்பட்டன.

மேலும், சட்டக்குழுவின் பரிந்துரைகளின்படி ஜி.எஸ்.டி. விதிகள் மற்றும் படிவங்களை திருத்துவது; சில படிவங்களை தாமதமாக தாக்கல் செய்யும் பட்சத்தில் அதற்காக விதிக்கப்படும் தாமத கட்டணத்தினைக் குறைப்பது; குறிப்பிட்ட சில படிவங்களை தாக்கல் செய்வதற்கான காலக்கெடுவினை நீட்டிப்பது; மத்திய மற்றும் மாநில அரசு அலுவலர்களுக்கு ரீபண்ட் வழங்குவதில் சம அதிகாரம் வழங்குவது தொடர்பான அறிவிக்கைக்கு திருத்தங்கள் போன்ற பல்வேறு பரிந்துரைகள் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

ஜி.எஸ்.டி. சட்டங்களை திருத்துவதற்காக வணிக பிரதிநிதிகள், வணிக கூட்டமைப்பு மற்றும் வணிகர்களிடமிருந்து வரப்பெற்ற பல்வேறு கோரிக்கைகள் மற்றும் கருத்துக்களை சட்ட சீராய்வு குழு ஆய்வு செய்தது. அதனடிப்படையில், இணக்கமுறையில் வரி செலுத்தம்; தற்செயல் வரிவிதிக்கத்தக்க நபரின் பதிவு; உள்ளீட்டு வரி வரவினை துய்த்தல் தொடர்பான கூறுகள்; வரவுக்குறிப்பு மற்றும் பற்றுக்குறிப்பு தொடர்பான கூறுகள்; ரீபண்ட்ஸ்; மற்றும் வழங்குகை இடம் (Place of Supply) போன்ற ஜி.எஸ்.டி. சட்டத்தில் உள்ள அத்தியாயங்களுக்கு சட்டத்திருத்தம் மேற்கொள்வது தொடர்பான சட்ட சீராய்வு குழுவின் பரிந்துரைகளும் விரிவாக விவாதிக்கப்பட்டன.

கைவினைப் பொருட்களை கண்டறிவதற்கென ஒரு தனிக்குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவானது, தமிழ்நாடு உட்பட பிற மாநிலங்கள் வழங்கிய ஆலோசனைகளின் அடிப்படையில், 40 தலைப்புகளின்கீழ் கைவினைப் பொருட்களை கண்டறிந்து வகை செய்துள்ளது. இந்த தலைப்பில் உள்ள பல்வேறு கைவினைப் பொருட்களின் மீதான வரிவீதமானது அந்த துறையைச் சார்ந்துள்ள பல்வேறு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு நிர்ணயிக்கப்பட வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்கள் இந்தக் கூட்டத்தில் கேட்டுக் கொண்டார்கள்.

ஜி.எஸ்.டி. சட்டத்தின்கீழ் பல பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரியினை மாற்றியமைத்திட வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்கள் ஜி.எஸ்.டி. மன்றக் கூட்டங்களில் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில், இதற்கு முன்னர் நடந்த கூட்டங்களில் தமிழ்நாடு முன்வைத்த பல கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு சாதகமான முறையில் வரிவீதங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. மேலும், 23வது மன்றக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, 28% வரிக்குட்பட்டிருந்த 177 வகையான பொருட்களின் மீதான

வரியினை 18%-ஆக மற்றும் 2 பொருட்கள் மீதான வரியானது 28%-லிருந்து 12%-ஆக குறைக்கப்பட்டுள்ளது. வரிவீதத்தினை மாற்றியமைப்பது தொடர்பான ஏற்கனவே வைத்து நிலுவையில் உள்ள கோரிக்கைகள் மற்றும் தற்போது புதியதாக வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் சேர்த்து மொத்தமாக 60–க்கும் மேற்பட்ட கோரிக்கைகளை மன்றம் பரிசீலிக்க வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

இந்நேர்வில், Fitment Committee-ஆனது தமிழ்நாடு உட்பட பிற மாநிலங்களிலிருந்து வரப்பெற்ற வணிக பிரதிநிதிகள், வணிக கூட்டமைப்பு மற்றும் வணிகர்களிடமிருந்து வரி குறைப்பு மற்றும் வரி விலக்கு தொடர்பான பல்வேறு கோரிக்கைகளை பரிசீலித்து 29 பொருட்கள் மற்றும் 54 சேவைகள் மீது வரிக்குறைப்பு மற்றும் வரிவிலக்கு மற்றும் தெளிவுரை வழங்குவதற்கு பரிந்துரைகள் செய்திருந்தது. இந்த பரிந்துரைகளில், பாஸ்போரிக் ஆஸிட்; விபூதி; எண்ணெய் எடுக்கப்பட்ட அரிசி தவிடு; சொட்டு நீர்பாசன கருவிகள்; 20 லிட்டர் கொள்ளளவு கொண்ட கேன்களில் அடைக்கப்பட்ட தண்ணீர்; சர்க்கரை மிட்டாய்கள்; நுண் ஊட்டச்சத்துக்கள்; கேளிக்கை பூங்காக்கள், தண்ணீர் பூங்காக்கள், இராட்டினம், கோ–கார்டிங் மீதான நுழைவு வரி; டூர் ஆப்ரேட்டர் சேவைகள் தொடர்பான உள்ளீட்டு வரி வரவு அனுமதித்தல்; தோல் பொருட்கள் மற்றும் காலணிகள் தொடர்பான சில்லறை வேலை; கல்வி நிறுவனங்களால் நடத்தப்படும் தேர்வு மற்றும் நுழைவு தேர்வு தொடர்பான சேவைகள்; பொது கழிவு சுத்திகரிப்பு நிலையம் தொடர்பான சேவைகள் போன்ற தமிழ்நாடு முன்வைத்த கோரிக்கைகளும் உள்ளடங்கும்.

தமிழ்நாடு முன்வைத்து நிலுவையில் உள்ள வரிவிலக்கு தொடர்பான கோரிக்கைகளான கைத்தறி மற்றும் விசைத்தறி பொருட்கள்; ஜவ்வரிசி; தீப்பெட்டி;

ஊறுகாய்; வெண்ணெய்; நெய்; சானிடரி நாப்கின்; விவசாயக் கருவிகள்; ஜவுளித் தொழிலில் பயன்படும் இயந்திர பாகங்கள்; பம்பு செட்டுகள்; மற்றும் சுருட்டு போன்றவைக்கும் விரைந்து முடிவெடுக்க வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்கள் கேட்டு கொண்டார்கள்.

மேலும், அன்றாட மக்களால் பயன்படுத்தப்படக்கூடிய அலுமினிய பாத்திரங்கள் மீதான வரியினை 12 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகவும்; அலுமினிய மூலப் பொருட்கள் மீதான வரியினை 18 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகவும்; மற்றும் அலுமினியத்துணுக்குகள் மீதான வரியினை 18 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகவும் குறைத்திட வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்கள் இன்றையக் கூட்டத்தில் கோரிக்கை வைத்தார்கள்.

சாதாரண மக்கள் சீட்டு நிறுவனங்கள் மூலம் சிறு சேமிப்புகள் மேற்கொள்வதால், சிட்பண்ட் போர்மேன்களால் (foreman) வழங்கப்படும் சேவைகள் மீதான வரியினை 12 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைத்திட வேண்டுமெனவும், பேக்கரி தயாரிப்பு பொருட்கள் மீதான வரியினை குறைத்திட வேண்டுமெனவும், மாண்புமிகு அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்கள் இன்றையக் கூட்டத்தில் கோரிக்கை வைத்தார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**